யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 08 | வரலாறு

பெயர் / சுட்டெண் : ..... திரு.ந.விபுலன் B.A(Hons), M.A, PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

அலகு 03 – ஐரோப்பிய மறுமலர்ச்சி

01)
1. மறுமலர்ச்சி என்றால் என்ன?
2. மறுமலர்ச்சி தோன்றுவதற்கான அடிப்படைக் காரணம் யாது ?
3. மறுமலர்ச்சி தோன்றுவதற்கான பின்னணிகளை குறிப்பிட்டு விளக்குக?

02)
1. கல்வி மறுமலர்ச்சியால் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்களும், நூலாசிரியர் களையும், அவற்றுக்குரித்தான நாடுகளையும் அட்டவணைப்படுத்துக?
2. மானிடவாதம் என்றால் என்ன? மானிட வாத எழுச்சிக்கு முன்பு மனிதன் எவ்வாறு மதிக்கப்பட்டான் என்பதை விளக்குக.?
3. கலை பண்புகள் தொடர்பாக ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிகாலத்திலும், மறுமலர்ச்சிக்கு முற்பட்ட காலத்திலும் உள்ள இயல்புகளை ஒப்பிட்டு குறிப்பிடுக.?

03)
1. மறுமலர்ச்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற கலைகளையும், கலைப் படைப்புகளையும், அதனை வெளிப்படுத்தியவர்களின் பெயர்களையும் அட்டவணைப்படுத்துக.
2. சிறு குறிப்பு தருக.
    a. மைக்கல் ஆஞ்சலோ .
    b. லியனாடோ டாவின்சி,
    c. நிக்கலஸ் கொப்பனிக்கஸ்,
    d. கலிலியோ கலிலி,
    e. ஜொஹென்னஸ் கெப்லர்.

04)
1. மறுமலர்ச்சிக் காலத்தில் வைத்தியத் துறையின் வளர்ச்சியை உதாரணத்துடன் விளக்குக?
2. மறுமலர்ச்சிக் காலத்தில் திருச்சபையை எதிர்ப்பதற்கான முக்கியகாரணம் யாது?

www.ikedu.lk

05)

1. மத்திய காலத்தின் இறுதிப்பகுதியில் திருச்சபைக்கு எதிரான கருத்தை முன்வைத்தவர்களையும், அவர்களுடைய நாடுகளையும் குறிப்பிடுக?
2. திருச்சபை தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எவை?
3. திருச்சபைக்கு எதிராக தோன்றிய மதம் எது?
4. திருச்சபையின் குற்றங்கள் அடங்கிய பத்திரம் ஒட்டப்பட்ட தேவாலயம் எது?

அலகு 04 – நாடுகாண் பயணங்களும், ஐரோப்பியர் கீழைத்தேசங்களுக்கு வருகை தருதலும்

01)

1. நாடுகாண் பயணங்களுக்கு முன்னர் ஆசிய ஐரோப்பாவுக்கு இடையேயான வர்த்தகபாதைகளையும் அதனால் வளர்ச்சிபெற்ற நகரங்களையும் குறிப்பிட்டு விளக்குக?
2. நாடுகாண் பயணங்கள் தோற்றம் பெற்றமைக்கான உடனடி காரணங்களையும், ஏனைய காரணிகளையும் வரிசைப்படுத்துக?
3. நாடுகாண் பயணம் துரிதமாக வளர்ச்சி பெறுவதற்கான உந்து சக்தி ஏற்படுத்தியவர்களை குறிப்பிடுக?

02)

1. சிறு குறிப்பு தருக
   - ய. கடலோடி ஹென்றி
   - டி. பர்த்தலோமியஸ் டயஸ்
   - உ. வாஸ்கொடகாமா
   - ன. கிறிஸ்டோபர் கொலம்பஸ்
   - ந. பேர்டினன்ட் மகலன்.
2. நாடுகாண் பயணம் செய்த நாடுகள், நாடுகாண் பயணத்தில் ஈடுபட்டவர்கள், அவர்களின் கண்டுபிடிப்புகளை சுருக்கமாக தருக.?
3. ஆசியாவுக்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய நாடுகளையும் அந்த நாட்டவர்களையும் தருக?

03)

1. ஆசியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களையும் அதனை உற்பத்தி செய்த நாடுகளையும் குறிப்பிடுக.?
2. ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருவதற்கான காரணங்களை தருக?
3. ஐரோப்பியர்கள் ஆசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தினை ஏற்படுத்துவதற்காக உருவாக்கிய கம்பனிகளையும் அவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட வர்த்தக மையங்களையும் குறிப்பிடுக?

www.lkedu.lk

அலகு 05 - இலங்கையின் கரையோரப் பிரதேசம் போத்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்படல்

01)
1. போத்துக்கேயர் ஆசியாவிலும் ,இலங்கையிலும் முதலில் வந்து இறங்கிய இடத்தையும் காலத்தையும் நபர்களையும் குறிப்பிடுக?
2. இலங்கையில் போர்த்துக்கேயர் காலடி வைத்த காலத்தில் காணப்பட்ட இராட்சியங்களையும், ஆட்சியாளர்களையும் குறிப்பிடுக.?

02)
1. விஜயபாகு கொலை என்பதால் கருதப்படுவது யாது?
2. விஜயபாகு கொலைக்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக?
3. விஜயபாகு கொலைக்கு பின்னர் இலங்கையில் காணப்பட்ட இராச்சியங்களையும்,ஆட்சியாளர்களையும் குறிப்பிடுக. ?

03)
1. சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னை கோட்டை இராச்சியத்தை கைப்பற்ற தூண்டிய அரசியல் காரணிகள் எவை?
2. கோட்டை இராச்சிய தர்மபால மன்னன் மக்களை வெறுக்கும் வகையில் செய்த செயற்பாடுகளை குறிப்பிடுக?
3. மல்வானை உடன்படிக்கை பற்றி சிறு குறிப்பு தருக?

04)
1. சீதாவாக்கை இராச்சியத்தின் மன்னன் முதலாம் இராஜசிங்கன் கோட்டை ,கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த அதிகாரப் பரவலை விளக்குக?
2. சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?
3. சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகளை குறிப்பிடுக?

05)
1. போத்துக்கேயருக்கும் ,சுதேச மன்னனுக்கும் இடையில் சீதாவாக்கை கண்டி இராச்சியத்தில் நடைபெற்ற போர்களை வகைப்படுத்தி, போர் நடைபெற்ற காலம், தோல்வியடைந்த இடம், போரில் பங்குபற்றியவர்கள் என்பவற்றை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றை தயாரிக்குக.?
2. போத்துக்கேயர் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடியாமைக்குரிய காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?
3. போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தை இலகுவாக கைப்பற்ற முடிந்தமைக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?

06)
1. போத்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்ற கூடியதாக இருந்தமைக்கான காரணிகள் எவை?
2. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் கரையோர நிர்வாக முறைகளை சுருக்கமாக குறிப்பிடுக?
3. போர்த்துக்கல் நாட்டிலிருந்து இலங்கை வரையிலான ஆட்சி அதிகார பரம்பலை விளக்குக?

www.ikedu.lk

07)

1. போத்துக்கேயரின் ஆட்சியில் இலங்கைப் பொருளாதாரங்களில் முக்கிய இரண்டு பிரிவுகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?
2. போர்த்துக்கேயர் சமயம் பரப்புவதற்காக இலங்கையில் வந்த சபைகளையும், பரவிய இடங்களையும் குறிப்பிடுக?

08)

1. கத்தோலிக்க சமயத்தை இலங்கை மக்கள் தழுவுவதற்கு போர்த்துக்கேயர் பின்பற்றிய தந்திரோபாயங்களை குறிப்பிடுக?
2. இலங்கை பண்பாட்டில் இணைந்து காணப்படுகின்ற போத்துக்கேயரின் எச்சங்களை குறிப்பிட்டு விளக்குக.?

09) இலங்கை படத்தில் குறித்து காட்டுக

கோட்டை, செங்கடகல, யாழ்ப்பாணம், சீதாவாக்கை, கொட்டியாரக்குடா, திருகோணமலை, லங்கா பட்டுன, சூரியத்துறை ,நீர்கொழும்பு, சிலாபம், காலி, மாத்தறை, மன்னார், சிகிரியா,பொலநறுவை, அநுராதபுரம் ,இரணைமடு, கலாவாவி, மின்னேரியா வாவி, பராக்கிரம சமுத்திரம், ஜோதகால்வாய், மினிப்பே கால்வாய், எலஹர கால்வாய்.

10) உலகம் படத்தில் குறித்து காட்டுக

ஸ்பானியா ,ஒல்லாந்து ,பிரித்தானியா, பிரான்ஸ், போர்த்துக்கல், லிஸ்பன், அலெக்சாந்தியா, இத்தாலி, வெனிஸ், உரோம், கொன்ஸ்தாந்து நோபிள், மத்தியதரைக்கடல், செங்கடல், அரபிக்கடல், கோவா, யாவா, ஜெனோவா, பாண்டிச்சேரி, சென்னை, கல்கத்தா, ஜப்பான், சீனா , ஜெனோவா ,சுமாத்திரா, இந்தியா, எகிப்து, பாரசீகம், அரேபியா, பர்மா, காரைக்கால், பத்தேவியா, நன்னம்பிக்கை முனை.

***

www.ikdu.lk